[1973 ஏப்ரல் 2

திரு. ஜே. ஜேம்ஸ் : பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்குக்கூட இந்தத் தொழில் வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் செய்வது தொழில் அல்ல என்று கணக்கெடுத்து அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக இது தொழில் வரி என்று இருந்தாலும் தொழில் வரி பெறப்படுவது வருமானத்தின்மீது நிர்ணயிக்கப்படுகிற ஒன்ருகத்தான் கொள்ளப் பட்டு வருகிறது. எது தொழில், யார் செய்கிருர்கள் என்ற விவரங்களுக்குப்போனுல் பல தொல்லைகள் வரும். நகரமன்றம், மாநகராட்சிமன்றம் இவற்றினுல் ஏற்படுகிற வசதிகளை எல்லோரும் அனுபவிப்பதால், இந்த வரிவிதிப்பிற்கு அடங்கவேண்டியவர் களாக இருக்கிருர்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்கள் இந்தமாதிரி வரிக்கு ஆளாக்கப் படுகிருர்கள். ஆதலால் இதை உடனடியாக மாற்றியமைக்கவேண்டு மென்று முனிசிபல் அதிகாரிகளுக்கு வேண்டிய தாக்கீதை இந்த அரசாங்கம் நல்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பிரிவுகளை மாற்றியமைப்பதற்கான நிலை இல்லை. இவ்வளவு உச்சவரம்புதான், எந்த அளவிற்கு அதை அமைக்கலாம் என்பதை அரசு யோசித்துக் கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கறிஞர்களைச் சேர்த்துக்கொண்டதால் உங்கள் கேஸ் வீக்காகப் போய்விட்டது.

வந்தவாசிப் பேரூராட்சிக்கு சாலை மானியம்

*599 வினு—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி பேரூராட்சிக்கு 1971-72-ம் ஆண்டுக்குத் தார் சாலை போட அரசு மானியம் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்,

(இ) ரூ. 11,127.

1973 ஏப்ரல் 2]

திரு. கே. எ. வகாப் : வந்தவாசியில் உள்ள சாலைகளைப் போட நாங்கள் அதிகமானத் தொகை கேட்டிருந்தோம். ஆனால் ஒரு அளவை வைத்து ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கொடுக்கிறார்கள். சில பேரூராட்சிகள் அதைப் போடுவதில்லை. ஆகவே சாலைகளைப் போடுகிற பேரூராட்சிகளுக்கு அதிகமாகக் கொடுக்கலாம். ஆகவே அந்த வகையில் சிலவற்றிற்கு மேலே கொடுக்கலாம் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு கொடுக்கிற மானியத்திற்கு ஒரு வரையறை உண்டு. ரூ. 10,000 கொடுக்கலாம் என்பது அந்த வரையறை. மீதமுள்ளதை ஒன்றியம் அல்லது நகராட்சிமன்றம் தன் நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும். வந்தவாசிக்கு ரூ. 11,127 கொடுத்திருக்கிறோம். ஆக ரூ. 1,127 அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் ராட்டிபிக்கேஷன் செய்ய கேட்டிருக்கிறார்கள். அது அரசுக்கு வந்திருக்கிறது. வழங்கப்படவேண்டுமென்று விதித்த அளவைவிட இதற்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

உப்பனாற்றின் குறுக்கே பாலம்

*** 600 வினா—திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி வட்டம், திருநகரிக்கும், வருசபத்து எடமணல் ரோட்டிற்கும் இடையில் உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கோ. இளங்கோவன் : கட்டப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். எவ்வளவு காலத்தில் கட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கட்டப்பட இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா என்பது கேள்வி. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். திருநகரிக்கும் வருசபத்து எடமணல் ரோட்டிற்கும் இடையில் உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது 51 சாலைப் பணிகளின்